بسم الله الرحمن الرحيم

**Friday Sermon** / வெள்ளிக்கிழமை குத்து.்.பா

06 April 2018 (18 Rajab 1439 A.H)

# FINANCIAL SACRIFICE (part 2)

# நிதி தியாகம் (பகுதி 2)



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுத், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

**அல்ஹம்துலில்லாஹ்! சும்ம அல்ஹம்துலில்லாஹ்!** கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த நிதி தியாகம் என்ற விஷயத்தின் இரண்டாம் பகுதியினை நான் தொடர்கின்றேன்.

கடந்த வாரம் நான் கூறியது போன்று, மனிதனின் அனைத்துவிதமான பொருளாதார மற்றும் பிற பிரச்சினைகளுக்கான தீர்வை, இறைவழியில் நம்பிக்கையாளர்கள் செலவு செய்வதன் மூலம் கண்டுகொள்ளலாம். வறுமை, எல்லா விதமான கஷ்டங்கள் மற்றும் சிக்கல்கள் ஆகியவற்றை சமாளிப்பதற்கு இறைவழியில் நிதி தியாகம் செய்வதன் மூலம் முடிந்து விடுகின்றது. வறுமையை வெல்வதற்கான மற்றொரு வழி, உண்மையான நம்பிக்கையாகும். “ஜக்காத் மற்றும் நிதி பங்களிப்புகள் செய்வதன் மூலம் நம்பிக்கை அதிகரிக்கின்றது. அதன் விளைவாக இறைவனிடமிருந்துள்ள வெற்றியும் மகிழ்ச்சியும் அவர் பெற்றுவிடுகின்றார். அல்லாஹ்வின் வழியில் தியாகங்கள் செய்பவர்களை ஒரு போதும் அவன் புறக்கணிப்பதில்லை. அவர்களின் தேவைகளை ஒரு போதும் அவன் இழக்கவைக்கமாட்டான். ஒன்று, நாம் இறைவனின் முன்னால் ஒரு யாசகராக வேண்டும் அல்லது உலகிற்கு முன்னால் ஒரு யாசகராக வேண்டும். இறைவனிடம் யாசிப்பதே நல்லது. .அதுவே சரியான அறிவு திறன்

ஒருவர் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டிய ஒரு விஷயம், ஒருவர் இறைவனிடம் யாசிப்பதன் மூலம், அவர் இறை இன்பத்தை அடைகின்றார். இது நிறுவப்பட்ட ஒரு உண்மையாகும். அதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. தவறாக புரிந்துக்கொண்ட காரணத்தால் சிலர் புகார் கூறுவதுண்டு. அதாவது ஜமா அத்துச் சஹிஹில் இஸ்லாம், அதன் உறுப்பினர்களிடம் நிதி தியாகங்கள் செய்யவேண்டியதன் அவசியத்தைக் குறித்து நிரந்தரமாக கூறிவருகின்றது. ஆனால் மற்று அவசியமான விஷயங்கள் மீது எந்த கவனமும் அது செலுத்துவதில்லை. உண்மையில் இது கூறுவது, ஜமா அத்தின் அதிகாரிகளல்ல. மாறாக நம்பிக்கையாளர்கள் நிதி தியாகங்கள் செய்ய வேண்டும் என இறைவன் தான் திருக்-குர் ஆனில் கூறியிருக்கின்றான். அந்த உண்மையை ஜமா அத்தின் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர் என்று மட்டும். ஆகவே இவ்விஷயத்தில் அவர்கள் மீது எந்த குற்றமும் இல்லை. இறைமார்க்கத்தில் செலவு செய்வதன் மூலம் ஒவ்வொருவருக்கும் அவர்களின் ஆன்மீகம் மற்றும் பௌதீகவுமான பயன்கிடைக்கின்றது.

நிதி பங்களிப்புகள் மூலம் நேர்மை அதிகரித்துவிடவும், ஆன்மாவு சுத்தமாகிவிடவும் செய்கின்றது. அத்துடன் தக்வாவைப் பெற்றுக்கொள்ளவும் முடிகின்றது. நிதி பங்களிப்புகள் வழியாக ஒருவரின் கண்ணோட்டத்திற்கு மாற்றம் ஏற்படவும், இறையருளுக்கும் மகிழ்ச்சிக்கும் அவர் ஆளாகிவிடவும் செய்கின்றார். அவர், தவறுகள் மற்றும் பலவீனங்களைக் கொண்டிருந்தாலும் கூட அவரது பங்களிப்புகள் ஒருபோதும் வீணாகுவதில்லை. அருள் கொடையாளனாகிய அல்லாஹ் அவரது தவறுகளை மன்னிப்பவனாகவும் அவருக்கு உதவிபுரிவனாகவும் மேலும் மிக சிறந்த முறையில் அவரை மாற்றிவிடுபவனாகவும் இருக்கின்றான். அல்லாஹ் மிக உன்னதமானவன். அவன் இரக்கமுடையவன். பெற்றோர்களைவிட பாசமிக்கவன். முற்றிலும் சிறந்த பாதுகாவலன். இன்னல் கட்டங்களிலிருந்து இவனது பிரியமான சேவகர்களை பாதுகாப்பவன். திருக்குர்ஆனில் நாம் காண்கின்றோம். இறைவன் அவனது

அன்புக்குரிய அடியார்களை மன்னிப்பவனாக இருக்கின்றான். இறைவழியில் செலவு செய்பவர்களின் குறைபாடுகளை அவன் மன்னிப்பவனாகயிருக்கின்றான் என்பதை நான் அறிவேன். அத்தகையாளர்கள் பயபக்தியுடன் வளர்கின்றனர். ஒரு பக்தியுள்ள தாய், தனது பிள்ளைகள் இறைவழியில் செலவுசெய்யாமலிருந்தால் அத்தாய் ஒரு போதும் மகிழ்ச்சியடையமாட்டாள். இறைவழியில் செலவு செய்து கொண்டால் அது தம் பிள்ளைகளுக்கு சுமையாகிவிடும் என்றும் அத்தாய் கருதுவதில்லை. மாறாக தம் பிள்ளைகள் அந்த அருளில் பங்கேற்பதற்கே அத்தாய் விரும்புகின்றாள்.

சில பெற்றோர்கள், சுயம் சம்பாதிக்க தொடங்கியுள்ள தம் பிள்ளைகளை இறை வழியில் செலவு செய்வதிலிருந்து தடுத்துக் கொள்கின்றனர். காரணம் அவர்கள் தம் வாழ்க்கையில் ஒரு நிலையான இடத்தை அடையவில்லை எனக்கூறுகின்றனர். வேறு சிலர் இத்தகைய செலவு செய்தல்களை வீணான காரியம் என எண்ணுகின்றனர். (இறைவன் பாதுகாப்பானாக)

ஆனால் வேறு சில பெற்றோர்கள், அவர்களுக்கு கிடைத்த இந்த அருளுக்கு அவர்கள் நன்றியினை செலுத்துகின்றனர். அதைப்போன்று அந்த அருள்களுக்கு தங்களின் பிள்ளைகளும் ஆளாகிவிட வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். அதற்காக அவர்கள் தம் பிள்ளைகளை ஊக்குவித்துக் கொள்கின்றனர்.

சில பிள்ளைகளுக்கு, அவர்களின் பெற்றோர்கள் மிக சிறந்த முறையில் பயிற்ச்சியளிக்கின்றனர். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதன் தத்துவத்தை அவர்கள் தம் பிள்ளைகளுக்கு புரியவைக்கின்றனர். சில இளைஞர்கள் அல்ஹம்துலில்லாஹ்! இறை வழியில் செலவு செய்வதற்காக தங்களின் சம்பாத்தியங்களை எனக்கு அனுப்பிவைக்கின்றனர். வேறு சிலர் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக செயல்படுகின்றனர். அவர்களுக்கு இதுவொரு சாபமாக மாறாமலிருப்பதற்கு அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மறவாமலிருங்கள், இறைவழியில் செலவு செய்வது ஒரு நம்பிக்கையாளரின் மிகவும் அறிவார்ந்த முதலீடாகும். உங்களை அல்லாஹ் ஒருபோதும் கைவிடமாட்டான். நீங்கள் அவனை நினைவு கொள்ளும்போது, அவன் வழியில் செலவு செய்வதற்கு நீங்கள் விரும்பும் போது, உங்களால் இயன்றவரையில் அதாவது உங்களின் வருமானத்திற்கு உகுந்த வகையில் நீங்கள் அவன் வழியில் உதவி செய்யும் போது, அல்லாஹ் அதை உங்களுக்கு இருமடங்காக திரும்ப வழங்குகின்றான். இவ்வுலகிலும் மறுவுலகிலும்! ஆனால் வாழ்க்கையின் மிக முக்கியத்துவமான இந்த தத்துவத்தை அனைவரும் உணர்ந்ததில்லை. இறைவனின் இந்த பெருந்தன்மையை மற்றும் கருணையைப் பற்றி அவர்கள் உணர்ந்திருந்திருந்தால்!

இறைவழியில் உதவிபுரிவதற்கான பிள்ளைகளின் நோக்கங்களுக்கு பெற்றோர்கள் ஆதரவாகயிருக்க வேண்டும். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதிலிருந்து தங்களின் பிள்ளைகளை தடுத்துக் கொள்ளும் பெற்றோர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் தான்.

தங்களின் பிள்ளைகள் இறைவழியில் சேவைபுரிய ஆயத்தமாகி கொள்ளும்பொழுது, இறைவழியில் பணத்தை வீணடிக்காமலிருக்கும்படி அப்பிள்ளைகளை பெற்றோர்கள் கண்டித்து, வேறு விதமான ஆலோசனைகளை அப்பிள்ளைகளுக்கு அளிப்பது மிகவும் மோசமான விஷயமாகும். நிச்சயமாகவும் அல்லாஹ் திருக்குர்-ஆன் மூலம் அறிவுறுத்துகின்றான். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கே முதலிடம் அதற்கு பிறகே பெற்றோர்களும் அவர்களின் விருப்பமும்!. இறைகட்டளைகளை மதித்து நடந்துக் கொள்வதற்கு தங்களின் பிள்ளைகளை எந்த பெற்றோர்கள் ஊக்குவிக்கின்றார்களோ அவர்கள் தாம் உண்மையில் பெருந்தன்மையான பெற்றோர்கள். பாராட்டிற்குரியவர்களும் அவர்கள்தாம். இறையருளுக்கும் இறையன்புக்கும் ஆளாகிவிடுபவர்களும் அவர்கள் தாம். ஆனால் பெற்றோர்கள் இறைகட்டளைகளை மதிக்காமலிருந்தால், இறைவழியில் முழுமையாகவும் சேவை புரிவதற்கு அவர்கள் தடையாகயிருந்தால், அக்காலம் அவ்வளவும் பெற்றோர்களை மதிக்கவேண்டியதும் பாதுகாக்க வேண்டியதும் பிள்ளைகளின் கடமையாகும். ஆனால் நம்பிக்கையின் காரியத்தில் தங்களின் பெற்றோர்கள் வழங்கிய தவறான போதனைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பதிலாக என்றென்றும் பசுமையுடனிருக்கும் இறைப்போதனைகளுக்கு ஏற்றவாறு செயல்பட வேண்டும்.

இத்தகைய பல வழக்குகள் என் கவனத்திற்கு வந்ததுண்டு. அதாவது பிள்ளைகள் இறைவழியில் செலவு செய்வதற்கு ஆயத்தமாகும் போது அதற்கு பெற்றோர்கள் தடையாகயிருக்கும் வழக்குகள் (என் கவனத்திற்கு வந்ததுண்டு). அல்லாஹ்வின் அருளால், அத்தகைய வழக்குகளுக்கு மிக நல்ல நிலையில் தீர்வை கண்டு கொள்ள முடிந்தது. அல்லாஹ்வின் தூதர் என்ற நிலையில் அதாவது இறைவன் என்னை உலகளாவிய குடும்பத்தின் தலைவராக வைத்திருக்கின்றான் என்ற நிலையில் அவர்களின் தனிப்பட்ட விஷயங்களைக்கூட எந்த பயமுமின்றி என்னிடம் கூறிக்கொள்ளவும் அதற்கு தீர்வு கண்டுகொள்ளவும் செய்கின்றனர்.

இந்த முக்கியமான கேள்வியுமாக தொடர்புடைய திருக்குர்-ஆன் வசனம் என் கவனத்திற்கு வந்துள்ளது. அது கீழ்வருமாறாகும்.

**“வறுமைக்கு பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்”** (6:152)

இவ்வசனம் பொதுவாகவும், சரியாகவும் விளக்கப்பட்டுள்ளன. அதாவது வறுமையின் பயத்தாலோ அல்லது பாதுகாப்பு பயத்தாலோ அல்லது தேசிய பொருளாதார காரணத்தாலோ பிறப்பு கட்டுப்பாடுகளை செய்ய வேண்டாம். இவ்வசனம் பொதுவாக இவ்விஷயத்தைத் தான் எடுத்துக் கூறியிருக்கின்றது. ஆனால் இவ்வசனத்தை இவ்வகையிலும் விளக்கி கொள்ளலாம். அதாவது உங்களின் பிள்ளைகளை உங்களின் கரங்கள் கொண்டு கொலை செய்யாதீர்கள். அதாவது இறைவழியில் செலவு செய்வதற்கு நீங்கள் அவர்களை அனுமதிக்காமலிருக்கும் போது!

நமது இறைவன் நம் இதயத்தின் நிலையை மிக நன்கு அறிபவனாகயிருக்கின்றான். இறைவழியில் செலவு செய்தல் என்பது, ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களுக்கு ஒருபோதும் தவிர்த்துக் கொள்ள முடியாத ஒரு விஷயமாகும். இறைவழியில் செலவு செய்வதன் மூலம், நாம் பெற்றுக் கொள்ளும் பயனைக்குறித்தும் அருட்களைக் குறித்தும் எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். முழுமையான விழிப்புணர்வு, மனத்தாழ்மை மற்றும் உண்மையான உணர்வுடனும் நாம் வழங்க வேண்டும். நல்ல எண்ணத்துடன் செய்யும் செயல்களைத்தான் அல்லாஹ் விரும்புகின்றான். அது நம் சொல்லுக்கும் அப்பாலிருக்கும். சில நேரங்களில் தொல்லையை விடுவிப்பதற்காக ஒருவர் மற்றொருவருக்கு ஏதேனும் கொடுக்கின்றார். அல்லது பிடிவாதத்துடன் இருக்கும் குழந்தைக்கு ஏதேனும் கொடுக்கின்றார். அதை போன்றே மக்கள் சில நேரங்களில் பிச்சைக்காரனுக்கு ஏதாவது வழங்குகின்றனர். நீங்கள் கொடுக்கும் போது இதய உருக்கத்துடன் கொடுங்கள். நேர்மையான நோக்கத்துடன் கொடுங்கள். இனிமையான உணர்ச்சியுடன் கொடுங்கள். அதுவே உங்களுக்கு மிகவும் நல்லது. அது வழியாக உங்களின் மனிதாபிமானம் எழும்புகின்றது. இவ்வுலகில் நீங்கள் ஒரு தற்காலிகமான ஒரு பயணத்தில் இருக்கின்றீர்கள் என்ற உண்மையை நீங்கள் உணர்ந்து கொள்கின்றீர்கள். மறுவுலகம் தான் நித்தியமானது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நீங்கள் இந்த பகுத்தறிவுடன் வாழ்ந்து கொண்டால், அனைத்து விதமான நற்செயல்களையும் இறைத்திருப்திக்காக சமர்பித்துக் கொண்டால், அந்நேரம் இறைவன் உங்களை பாராட்டுவான். உங்கள் மீது இரக்கத்தையும் கருணையையும் பொழிந்துக் கொள்வான். வானங்களையும் பூமியையும் படைத்த அந்த எல்லாம் வல்ல இறைவன், உங்களுடன் எந்நேரம் இருக்கும் அந்த இறைவன், உங்களை மிக ஆழமாக நேசித்துக் கொள்வான். எல்லாம் முடிவடையும் வரையில்!

இந்த மனப்பான்மை நம் ஜமா அத்து உறுப்பினர்களுக்கு இருந்தால், அனைத்து இஸ்லாமிய சமூகமும் இதை உணர்ந்தால், ஒரு உடம்பும் ஒரு ஆன்மாவுமாக நீங்கள் மாறிக் கொண்டால், எல்கையில்லாத அளவிற்கு நாம் முன்னேற்றத்தை அடைவோம். இந்த முன்னேற்றத்திற்கு இன்னல் விளைவிக்க எந்த ஓர் சக்திக்கும் ஆகாது.

அவ்வாறு முன்செல்ல அல்லாஹ் நமக்கு உதவி புரிவானாக. ஆமீன் சும்ம ஆமீன். யாரப்பல் ஆலமீன்.


**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**

**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663